**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075838

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் **கடலூர்** PS: காவல்நிலையம் **ஊ.த.க. பிரிவு** Year: ஆண்டு **2021** FIR No.: மு.த.அ. எண் **06/2021** Date: நாள் **27.07.2021**

2. (i) Act சட்டம்: **Indian Penal Code** Sections பிரிவுகள்: **409, 468, 471 r/w 109**
   (ii) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988** Sections பிரிவுகள்: **13(2) r/w 13(1)(d)**
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **2011** Date to : நாள் வரை **2012**
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **09.03.2020** Time : நேரம் **1100 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **1100 hrs**

4. Type of Information : Written/ Oral : **கணினி தட்டச்சு**
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **சுமார் 30 கி.மீ. மேற்கு**
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **S.மாலா** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **சேகர்**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **---** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் **---**
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **காவல் ஆய்வாளர்,** (g) Address : முகவரி **ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) திரு.A.அனந்தராம், வயது 57/2021, த/பெ அற்புதம், முன்னாள் வட்டாட்சியர், பண்ருட்டி வருவாய் வட்டம், கடலூர் மாவட்டம்.**
**2) திரு.த.ராமசாமி, வயது 65/2021, த/பெ தங்கவேல் கவுண்டர், 2,தனலஷ்மி நகர், அய்யனார் கோவில் பாட்டை, பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.**
**3) திரு.S.திருநாவுக்கரசு, வயது 65/2021, த/பெ சீனிவாசன், முன்னாள் நகர நில அளவையர், பண்ருட்டி வருவாய் வட்டம்.**
**4) திரு.த.ஏழுமலை, வயது 50/2021, த/பெ தங்கவேல் கவுண்டர், 76,சத்தியமூர்த்தி நகர், பண்ருட்டி மற்றும் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**முதல்நிலை விசாரணை நடத்தப்பட்டது. (PE 21/2020/REV/CL)**

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (attach separate sheet if necessary)
சம்பந்தப்பட்ட / களவுபோன சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
—

10. Total value of properties stolen / involved —
சம்பந்தப்பட்ட / களவுபோன சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No., if any: —
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் விவரம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>**

திரு.கு.தயாநிதி, த/பெ குப்புசாமி, நெ.91/39,சத்தியமூர்த்தி தெரு, பண்ருட்டி மற்றும் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரின் 26.02.2019 தேதியிட்ட புகார் மனுவின் பேரில், முதல்நிலை விசாரணை எண். PE.21/REV/CUD/2020 நாள் 09.03.2020 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் முடிவில், குற்ற வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பது தெரிய வந்ததால், குற்றச்சாட்டில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய தகுந்த அலுவலரிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்விசாரணையின் விபரம் பின்விருமாறு :- கடலூர் மாவட்டம், பண்ருட்டி, சத்தியமூர்த்தி தெருவில் ஸ்ரீ நல்லமுத்து பூரணி புஷ்கலை சமேத அய்யனார் திருக்கோவில் உள்ளது. இக்கோவில் அப்பகுதி மக்களால் கட்டப்பட்டு, கோவிலின் மற்றும் தர்மகர்த்தாக்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கோவிலுக்கு பண்ருட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் படியும் மற்றும் 1965, 1975,

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station S. Mala 27/07/2021.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.07.2021 at 14.45hrs

Name / பெயர் S. MALA
Rank / பதவி Inspector of police,
V & AC., CUD,

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

1983 ஆம் ஆண்டுகளில் வருவாய்துறை ஆவணங்களின் படியும், 2 ஏக்கர் 42 செண்ட் நிலம் உள்ளது. கடந்த 22.01.2012 ஆம் தேதி, மேற்படி கோவிலை புதுபித்து, கும்பாபிஷேகம் செய்வது தொடர்பாக பண்ருட்டி மணி செட்டியார் திருமண மண்டபத்தில் கூட்டம் போடப்பட்டு கும்பாபிஷேகம் செய்வது தொடர்பாக கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது. இந்நிலையில் 2012 ஆம் ஆண்டில், வருவாய்துறையின் பதிவுகளில், RTR 3149/11-12 படி உட்பிரிவு செய்யப்பட்டு வார்டு A, பிளாக் 61, T.S.No. 6/3A2–ல் 0.9600 ஹெக்டர் [2.37 ஏக்கர்] நிலமானது, நிலத்திற்கு உரிமையில்லாத ராமசாமி த/பெ தங்கவேல் என்பவருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கோவில் கும்பாபிஷேகம் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தின் போது, கோவில் நிலங்களை பட்டா மாற்றம் செய்ய ராமசாமி த/பெ தங்கவேல் என்பவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது போல் தீர்மானம் எழுதப்பட்டு, அதனை கொண்டு ராமசாமி என்பவர், நிலத்தினை அவருடைய பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார் என்பதும், மேற்படி விண்ணப்பத்தின் பேரில் நடவடிக்கை மேற்கொண்ட, 2012 ஆம் ஆண்டில் நகர சார் ஆய்வாளராக பணியாற்றிய திருநாவுக்கரசு அவர்கள், பட்டா மாற்றம் செய்யப்பட வேண்டிய நிலமானது பண்ருட்டி, சத்தியமூர்த்தி வீதியில் ஸ்ரீ நல்லமுத்து பூரணி புஷ்கலை சமேத அய்யனார் திருக்கோவிலுக்கு சொந்தமாக இருந்த போதும், விண்ணப்பத்துடன், இணைக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் அடிப்படையில் கோவில் நிலங்களை ராமசாமி பெயரில் பட்டா மாற்றம் செய்ய பரிந்துரை செய்துள்ளார் என்பதும், மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் பண்ருட்டி வருவாய் வட்டாட்சியராக (19.01.2011 முதல் 05.04.2012 வரை) பணியாற்றிய திரு.அ.அனந்தராம் என்பவர், ராமசாமி த/பெ தங்கவேல் என்பவருக்கு T.S.No. 6/3A2–ல் 0.9600 ஹெக்டர் [2.37 ஏக்கர்] நிலத்தினை பட்டா மாற்றம் செய்து ஆணை வழங்கி உள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. மேலும் திரு.த.ராமசாமி த/பெ தங்கவேல் கவுண்டர் என்பவர் கோவிலுக்கு சொந்தமான நிலம் என நன்றாக தெரிந்தும், மேற்படி நிலத்தினை அபகரிக்கும் நோக்கில், கோவில் கும்பாபிஷேகம் தொடர்பாக கூட்டம் போடப்பட்ட போது, பட்டா மாற்றம் செய்ய தனக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது போல் போலியான தீர்மானம் எழுதி கொண்டு, அந்த தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்து, அவருடைய பெயருக்கு பட்டா மாற்றம் பெற்று நிலத்தினை அபகரித்துள்ளார். மேற்படி பட்டா மாற்றத்தினை அடிப்படையாக கொண்டு ராமசாமி த/பெ தங்கவேல் என்பவர் T.S.No. 6/3A2–ல் 0.9600 ச.மீட்டர் [2.37 ஏக்கர்] நிலத்தில் பொது பாதைக்காக 0.1851 ச.மீட்டர் நிலத்தை பண்ருட்டி நகராட்சி ஆணையருக்கு, பண்ருட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 191/16 நாள் 191.2016 ன் படியும், 0.8749 ச.மீட்டர் நிலத்தை அவரின் சகோதரர் ஏழுமலை த/பெ தங்கவேல் என்பவருக்கு, பண்ருட்டி

சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 515/16 நாள் 29.02.2016 ன் படியும் தானசெட்டில் மெண்ட் செய்து கொடுத்துள்ளதும் தவறு ஆகும். மேற்படி நிலங்களை ராமசாமி பெயரில் பட்டா மாற்றம் செய்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்ட, பண்ருட்டி நகர சார் ஆய்வாளர் திரு.திருநாவுக்கரசு அவர்கள், உரிய ஆவணங்கள் ஏதும் இல்லாத போது பட்டா வழங்க பரிந்துரை செய்ததும், பண்ருட்டி வட்டாட்சியர் திரு. அனந்தராமன் அவர்கள் ஆவணங்களை பரிசிலனை செய்யாமல் பட்டா மாற்றம் செய்ய உத்தரவு வழங்கி, நிலத்தினை அபகரிப்பு செய்ய உடந்தையாக இருந்துள்ளனர். கோவிலுக்கு சொந்தமான நிலத்திற்கு பதிவுதுறை ஆவணங்கள் உள்ள நிலையில், எந்தவித ஆவண பரிவர்த்தனையும் இல்லாமல் தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு பட்டாமாற்றம் செய்ய நகர சார் ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளதும், நகர சார் ஆய்வாளர் திருநாவுக்கரசு என்பவரின் தவறான பரிந்துரையின் படி, ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் பட்டா மாற்றம் செய்ய அப்போதைய வட்டாட்சியர் அனந்தராமன் அவர்கள் உத்தவிட்டுள்ளதும் தவறு என தெரிய வருகிறது. மேற்படி விசாரணையின் மூலம் நகர சார் ஆய்வாளர் திரு. திருநாவுக்கரசு மற்றும் வட்டாட்சியர் திரு.அனந்தராம் ஆகியோர் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13(2) உடனிசைந்த 13(1)(d) ன் படி தண்டிக்க கூடிய குற்றச்செயல்கள் புரிந்தது தெரியவருகிறது. மேற்படி குற்றச்சாட்டில் பட்டாவினை தனது பெயருக்கு மாற்றி நிலத்தினை அபகரித்த திரு.த.ராமசாமி, த/பெ தங்கவேல் கவுண்டர், 2,தனலஷ்மி நகர், அய்யனார் கோவில் பாட்டை, பண்ருட்டி, கடலூர் மாவட்டம் (தனி நபர்), தானசெட்டில்மெண்ட் மூலம் நிலத்தினை பெற்று தற்போது தன்னுடைய பெயருக்கு பட்டா மாற்றம் செய்து த.ராமசாமியின் செயலுக்கு உடந்தையாக செயல்பட்ட திரு.த.ஏழுமலை த/பெ தங்கவேல் கவுண்டர், 76,சத்தியமூர்த்தி நகர், பண்ருட்டி மற்றும் தாலுக்கா, கடலூர் மாவட்டம் (தனி நபர்) , ஆவணங்களை பரிசிலனை செய்யாமல் பட்டா மாற்றம் செய்ய உத்தரவு வழங்கி, நிலத்தினை அபகரிப்பு செய்ய உடந்தையாக செயல்பட்ட திரு.A.அனந்தராம் த/பெ அற்புதம், முன்னாள் வட்டாட்சியர், பண்ருட்டி வருவாய் வட்டம், கடலூர் மாவட்டம் மற்றும் திரு.S.திருநாவுக்கரசு [Retired on 31.07.2014] த/பெ சீனிவாசன், முன்னாள் நகர நில அளவையர்,பண்ருட்டி வருவாய் வட்டம், கடலூர் மாவட்டம் ஆகியோர் மீது இதச பிரிவு 409, 468, 471 r/w 109 ன் படியும் ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 1988 ன் பிரிவு 13(2) உடனிசைந்த 13(1)(d) ன் படியும் ன்படியும் வழக்கு பதியப்படுகிறது.

எனவே, நான் இன்று 27.07.2021 ஆம் தேதி 14.30 மணிக்கு, மேற்படி குற்ற அலுவலர்கள் மீது, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண். 06/2021 சட்டப்பிரிவுகள்

409, 468, 471 r/w 109 and 13(2) r/w 13(1)(d) of The Prevention of Corruption Act 1988 ன் படியும் வழக்கு பதிய செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்கு), கடலூர் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் ண்காணிப்பாளர், மேற்கு சரகம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கு கோப்பில் வைக்கப்பட்டது.

S. Elala
27/07/2021
Inspector of police.
V&AC, CUD.,